DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.94/2025**
Prosecution witness **PW.3 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sekar | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(Accused present. Respective accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **19.11.2025**

**19.11.2025 முதல் விசாரணை** :

1. நான் குன்னூர் கரும்பாலத்தில் குடியிருந்து கார் ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மோகித் குலஜாவை எனக்கு தெரியும். நான் அவரிடம் கடந்த 5 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன்.

2. 04.05.2025ம் தேதி காலை 8 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த போது அ.சா.1 மோகித் எனக்கு போன் செய்து தான் வேலைக்கு ஆட்களை ஏற்றி வருவதற்காக பிக்கப் வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்ற போது ஒண்டிவீடு அருகே எதிரில் பைக்கில் ஒருவர் உரசுவது போல் வந்ததாகவும், அதில் மோகித்துக்கும் அந்த பைக் ஓட்டி வந்த நபருக்கு வாய்தகராறு ஏற்பட்டு, அந்த பைக் ஓட்டுனர் கல்லால் தன்னை அடித்துவிட்டதாகவும், தனக்கு ரத்தம் வருவதால் என்னை வருமாறு கூறினார். நான் எனது வண்டியை எடுத்துக்கொண்டு பத்து நிமிடத்திற்குள்ளாக ஒண்டிவீடு அருகே அவர் உட்கார்ந்திருந்த இடத்திற்கு சென்றேன்.

3. நான் சென்று பார்த்த போது அ.சா.1 மோகித்துக்கு மூக்கு, வாய் ஆகிய இடங்களில் ரத்தம் வந்துகொண்டிருந்தது. அந்த பைக் ஓட்டுனர் அங்கு இல்லை. காயம்பட்ட மோகித்தை எனது வண்டியில் ஏற்றி கொலக்கொம்பை

ஆரம்ப சுகாதார நிலையத்திதற்கு சிகிச்சைக்காக கூட்டி சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக சேலாஸ் வரை அழைத்து வந்து விட்டுவிட்டு நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

4. மறுநாள் 05.05.2025ம் தேதி கொலக்கொம்பை போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன் பேரில் காலை சுமார் 10 அல்லது 11 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். மோகித்துக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்பதால் அவர் சொல்ல சொல்ல நான் தமிழில் எழுதி அதை சென்று டைப் செய்து வந்து அதை மோகித்திடம் கொடுத்தேன், மோகித் கையொப்பம் செய்து போலிசாரிடம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனு தான் நான் டைப் செய்து கொண்டு வந்ததாகும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் .

<u>குறுக்கு விசாரணை</u> :-

1. நான் சம்பவயிடத்திற்கு சென்ற போது அங்கு யாரும் இல்லை என்றால் சரிதான். மோகித் மட்டும் தான் அங்கு இருந்தார். காயம்பட்ட மோகித்தை முதலில் கொலக்கொம்பை மருத்துவமனைக்கு தான் கூட்டிச்சென்றேன். சேலாஸ்சில் எந்தவொரு மருத்துவரையும் பார்க்கவில்லை என்றும், அங்கு மோகித் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சென்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் காலை 8 மணிக்கு போனதாக போன் மூலம் சொன்னார்.

2. மறுநாள் போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன் பேரில் சென்றேன். மோகித் சொன்னதை நான் தமிழில் எழுதினேன். நான் எழுதிய எழுத்துக்கள் கிறுக்கு முறுக்கலாக இருந்ததால் போலிசார் வாங்க மறுத்துவிட்டார்களா என்றால் ஆம். கொலக்கொம்பை காவல் நிலையம் அருகே உள்ள ஒரு கடைக்கு சென்று டைப் செய்து வந்தேன். நான் சொல்வது போல் அருகில் டைப் மிஷின் உள்ள கடை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

3. நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 னிடம் நான் வேலை பார்ப்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2025.11.19 18:03:57 +0530

Judicial Magistrate,
Coonoor.